1970 ஏப்ரல் 6] **[திரு. என். வரதராஜன்]**

தான் நீங்கள் கொடுக்க இருக்கும் கடன் ஒற்றிவைப்பு என்று அனுமதித்து இருக்கிறார்கள். உசிலம்பட்டி, திருமங்கலம், பழனி வட்டங்களில் உள்ள பகுதிகளிலும் கடனை ஒற்றிவைக்கவும், நில வரியை வஜா செய்யவும் நிவாரண வேலைகளுக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால்தான் அந்த வட்டாரத்திலுள்ள மக்கள் வாழ முடியுமென்ற நிலையிருக்கிறது. அதற்காக உடனடியாக அரசாங்கம் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் எற்கெனவே சொன்னேன். ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. கடன்கள், நிலவரி எங்கெங்கு கொடுக்க முடியாமலிருக்கிறதோ ஆங்காங்கு கலெக்டர்கள் உசிதம் போல் செய்யலாம். நிலைமைகள் உண்மையாக உறுப்பினர்கள் கூறும் வண்ணம் இருக்குமேயானால், கண்டிப்பாகக் கொடுக்க வேண்டுமென்று தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் எந்தவிதமான ஆயாசமும் அடையத் தேவையில்லை, அச்சப்பட வேண்டிய தேவையில்லை. எங்கே இந்தமாதிரி உண்மையான நிலைமைகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் அரசாங்கம் பரிவோடு கவனிக்கிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

(ஆ) குமரி மாவட்டம். குளச்சல் நகரில் மீனவர்கள், வீடுகள் தீக்கிரையாகி, வீடின்றி தவிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எம். சி. பாலன் அவர்களும், திரு. ஜே. ஜேம்ஸ் அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஓர் அவசரப் பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. எம். சி. பாலன் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

“குமரி மாவட்டம், குளச்சல் நகரில் உள்ள 156 மீனவர்கள் வீடுகள் 18—3—1970 அன்று தீக்கிரையாகி வீடிழந்து தவிப்பது பற்றி.”

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

“18—3—1970 அன்று குமரி மாவட்டம், குளச்சல் நகரில் உள்ள 156 மீனவர்கள் வீடு தீக்கிரையாகி வீடிழந்து தவிப்பது பற்றி”

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், கல்குளம் தாலுக்காவில், குளச்சல் கிராமத்தில் 19—3—1970 அன்று தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. அதில் 101 வீடுகளும், 5 பண்டக சாலைகளும் தீக்கு இறையாகின. பாதிக்கப்பட்டவர்கள் பொருள் சேதம் சுமார் ரூ. 1,00,200-க்கு சற்று அதிகமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. உயிர்ச் சேதமில்லை. ஆனால் சில பன்றிகளும், வாத்துகளும் தீவிபத்தில் மாண்டன. தலா ரூ. 80 வீதம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி அளிக்கப்பட்டது. மொத்தம் வழங்கப்பட்ட தொகை ரூ. 8,080 ஆகும். தவிர பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 2 படி வீதம் அரசாங்க கையிருப்பிலிருந்து ரூ. 289·74 மதிப்புள்ள அரிசி வழங்கப்பட்டுள்ளது.

திரு. எம். சி. பாலன் : தலைவரவர்களே, இதே போன்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மேல்மணக்குடி கிராமத்தில் 10 வீடுகள் தீக்கு இறையாகி எரிந்து விட்டன. அந்த வீடுகளில் கிட்டத்தட்ட ரூ. 10,000-க்கு

மேல் மதிப்புள்ள வலைகள் வைத்திருந்தார்கள் என்று கணக்கிட்டு அங்கு இருக்கக்கூடிய மீனளத் துறை மூலமாகவும் அங்கே இருக்கின்ற கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் அந்த ரூ. 10,000 அவர்களுக்கு மானியமாக தரப்பட்டது. அதே போல இந்த மீனவர்களுக்கும் ரூ. 1 லட்சத்திற்கு மேல் இழப்பு ஏற்பட்டிருப்பதன் காரணமாக அங்கே இருக்கின்ற மீனவர் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக மானியமாக இல்லாவிட்டாலும் கடனுக வாவது தருகின்ற உத்தேசம் இந்த அரசிற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த அரசு என்று சொன்னுல், அப்போது கொளச்சலில் தேர்தல் காலமாக இருந்தது, அந்தக் காலத்தில் இருந்த அரசு, அப்படிச் செய்தது என்று சொல்லி விடுவார்கள். ஆனுல் பிறர் சொல்லுகிருர்களோ சொல்லவில்லையோ, நாம் செய்ய வேண்டிய நியாயமான காரியங்களை செய்ய வேண்டியது தான். இது தேர்தல் இல்லாத காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி நிலை இருக்கிறது, எந்த அள விற்கு வசதி இருக்கிறது என்பதை உத்தேசித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை பரிசீலிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கொளச்சலில் ஏற்பட்ட தீ விபத்தில், தீயை அணைப்பதற்கான தீ அணைக்கும் படை நாகர்கோவிலி லிருந்து வந்ததாகவும், அது வர காலதாமதம் ஏற்பட்டதாகவும், அதன் விளைவாக போதுமான தீ அணைக்கும் படை வருவதற்கு இல்லாத காரணத் தால் கேரளத்தில், திருவனந்தபுரத்தில் இருக்கக்கூடிய தீ அணைக்கும் படையை வரவழைத்து அந்த தீயை அணைத்ததாகவும், ஆகவே தான் கூடுதலான நஷ்டம் ஏற்பட்டதற்கு காரணம் என்று கூறப்படுகிறது. ஆகவே இனிமேலாவது அந்த பிராந்தியத்தில் இந்த மாதிரியான விபத்துக்களை தடுப்பதற்கு மார்த்தாண்டத்திலோ அல்லது தக்கலையிலோ ஒரு தீ அணைக்கும் படையை நிறுவ வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது நல்ல யோசனை. இதை பரிசீலிக்கலாம்.

(இ) குமரி, நெல்லை மாவட்டங்களில், புதிய ரயத்வாரி சட்டப்படி நான்கு ஆண்டுகளுக்கும் சொத்து வரி வசூல் செய்யப்படுவதால் விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். சி. பாலன் அவர் களும், திரு. க. மு. கதிரவன் அவர்களும் ஓர் அவசர பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. எம். சி. பாலன் : சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை யிலும் புதிதாக அமுல் நடத்தப்படும் ரயத்வாரி சட்டப்படி கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து வரி வசூலிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரி யத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கா. மு. கதிரவன் : சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் குமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த செங் கோட்டையிலும் புதிதாக அமுல் நடத்தப்படும் ரயத்வாரி சட்டப்படி கடந்த நான்கு ஆண்டுகளுக்கும் சேர்த்து வரி வசூலிக்கப்படுவதால் விவசாயி களுக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.